பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 18 சனிக்கிழமை (01-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 154

# எழுச்சிமிகு மேதின விழாவுக்கு குடாநாட்டில் பூரண ஏற்பாடு

## மக்கள் பேரணியில் திரள்வர்

யாழ்ப்பாணம், மே 1

உலகத் தொழிலாளர் தினமான மே நாள், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று எழுச்சி பூர்வமாகக் கொண்டாடப்பட உள்ளது. மேதினத்தை ஒட்டி பிரமாண்டமான பேரணியும் மாபெரும் கூட்டமும் இன்று நடைபெற உள்ளன.

மே தினப் பேரணியிலும், கூட்டத்திலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கு பற்றுவார்கள். குடா நாட்டில் இயங்கும் பல்வேறு தொழிற் சங்கங்கள், பொதுசன அமைப்புக்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், ஊழியர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், கூட்டுறவாளர்கள் மற்றும் உழைக்கும் மக்கள், வேலை இழந்துள்ளவர்கள் ஆகியோர் இன்றைய பேரணியில் கலந்து கொள்வார்கள்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் மேதினப்பேரணி: வன்முறைகள் இடம்பெறலாம்

கொழும்பு, மே 1

கொழும்பில் இன்று இடம்பெறும் மேதினப் பேரணிகளின்போது வன்முறைகள் இடம்பெறலாம் என்று அஞ்சப்படுகிறது.

இதன் காரணமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

வெளி மாவட்டங்களில் இருந்து மேலதிகமாக 2 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளுக்காக கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஐ.தே.க. இம்முறையும் வழமைபோல காலிமுகத்திடலில் மேதினக் கூட்டத்தை நடத்தவுள்ளது.

ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கிருலப்பனையிலும் —

நவசமசமாஜக் கட்சி டிமெல் பூங்காவிலும் —

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலவாக்கலையிலும் இன்று மேதினக் கூட்டத்தை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வன்செயல் சந்தேகநபர்கள் பலர் பிணையில் விடுவிப்பு!

### எதிர்க்கட்சிகள் அச்சம்

கொழும்பு, மே 1

எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் தங்களின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக அச்சம் தெரிவித்திருக்கின்றனர்.

நேற்று தேர்தல் ஆணையாளருடனான சந்திப்பின்போது தமது அச்சத்தை அவர்கள் ஆணையாளரிடம் எடுத்துக் கூறினர்.

வெடிகுண்டு நிரப்பப்பட்ட இரு வாகனங்கள் கொழும்பு நகருக்குள் பிரவேசித்திருப்பதாக அரசு சார்புப் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் எதிர்க்கட்சியினரை கவலையும், கலவரமும் அடைய வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெடிகுண்டு வைத்திருந்த குற்றச்சாட்டுகளுக்காகக் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த கைதிகள் உட்பட வன்செயல்களுடன் சம்பந்தப்பட்ட பலர் அண்மைக் காலத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பதையும் எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையாளரிடம் நேற்று எடுத்துக் கூறின.

பிரஸ்தாப சந்தேக நபர்களை பிணையில் விடுவிப்பதற்கு பொலிஸார் நீதிமன்றத்தில் எத்தகைய ஆட்சேபனையையும தெரிவிக்கவில்லை என்பதையும் எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் சுட்டிக் காட்டினர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கட்டடம் தகர்க்கப்படும் என்று

## 'ஐலண்ட்' நிறுவனத்திற்கு தொலைபேசி பயமுறுத்தல்!

ஐலண்ட் மற்றும் திவயின பத்திரிகைகளை வெளியிடும் உபாலி நிறுவனத்தைத் தகர்க்கப் போவதாக நேற்று முழு நாளும் தொலைபேசி மூலம மிரட்டல்கள் வந்தபடி இருந்தன என்று அறிவிக்கப்படுகிறது.

மேதினம் அன்று கட்டடம் தகர்க்கப்படும் என்று தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டதாக உபாலி குறூப் நிறுவனத் தலைவர் டாக்டர் சிவலி ரத்வத்தை 'வெரித்தாஸ்' சிங்கள சேவைக்கு நேற்று தகவல் தெரிவித்தார்.

தமது நிறுவனத்துக்கும் பணியாளர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு தாம் பொலிஸ்மா அதிபரிடமும் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களிடமும் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் திரு. ரத்வத்தை கூறினார்.

ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் அரசாங்கத்தை விமர்சித்து 'ஐலண்ட்' 'திவயின' பத்திரிகைகள் அடிக்கடி செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றை வெளியிட்டு வருவது தெரிந்ததே. (ஒ-6)

### சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டன

## கொழும்பு பல்கலையில் ஆயுதக்கோஷ்டி அச்சுறுத்தல்

கொழும்பு, மே 1

லலித் அத்துலத் முதலியை கொலை செய்தவர்களைக் கண்டித்து கொழும்பு பல்கலைக் கழகத்தில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை அத்துமீறி பிரவேசித்த ஆயுதக் கோஷ்டியினர் கிழித்து சேதப்படுத்தினர்.

லலித் கொலைக்கு ஆட்சேபம் தெரிவித்து அங்கு காணப்பட்ட பதாகைகள் பலவற்றையும் ஆயுதபாணிகள் அகற்றி எடுத்துச் சென்றனர்.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இலக்கத் தகடுகள் இன்றி ஐந்து வாகனங்களில் வந்த காடையர் குழுவே இந்த அடாவடித்தனமான செய்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-6]

### அந்த இளைஞன் யார்?

## சடலத்தை அடையாளம் காண உதவினால் ரூ.2லட்சம்

கொழும்பு, மே 1

லலித் அத்துலத் முதலியைக் கொன்றவர் என்று சந்தேகிக்கப்படும் நபரின் அடையாளத்தைக் காண உதவும் எவருக்கும் 2 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

அத்துலத் முதலி கொலையுண்ட பின்னர் அவரைக் கொன்றதாகச் சந்தேகிக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தீவிரவாதிகள் குழு சென்னையருகே அதிரடி! ஈழத்தமிழ் கைதிகள் மூவரை மீட்டுச் சென்றது!!

## விடுதலைப் புலிகளின் வேலையாம்

சென்னை, மே 1

"தடா" சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த மூன்று ஈழத் தமிழர்களை, 4 பேர் கொண்ட தீவிரவாதிகள் குழு ஒன்று அதிரடித் தாக்குதல் நடத்தி மீட்டுக் கொண்டு சென்றது.

தமிழகத் தலைநகர் சென்னையிலிருந்து 70 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மதுராந்தகத்தில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் மூன்று பேரையே அவர்களது அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் குழு ஒன்று அதிரடித் தாக்குதல் நடத்தி, மீட்டுச்சென்றதாக இந்திய செய்தி நிறுவனங்கள் அறிவித்தன.

தீவிரவாதிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் தமிழ்நாடு பொலிஸாரில் ஒருவர் இயந்திரத் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:-

சென்னை மத்திய சிறையில் [illegible] கைதிகளாக [illegible] பன், சந்திரன், ரவி, விக்டர் ஆகியோரை திருச்சி – பட்டுக்கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக பாளையங்கோட்டை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடி குறித்து விசாரிக்க தனி விசாரணைக் கமிஷன்

சென்னை, மே 1

மதுராந்தகத்தில் ஈழத் தமிழ்த் தீவிரவாதிகள் மூவரை ஆயுதம் தாங்கிய குழு ஒன்று அதிரடித் தாக்குதல் நடத்தி மீட்டுச் சென்ற சம்பவம் குறித்து விசாரணை நடத்த உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்ட விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்படும்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று தமிழக சட்டசபையில் இத்தகவலை வெளியிட்டார்.

ஹோட்டல் அருகே வாகனத்தை நிறுத்திவிட்டு கைதி

( 6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை சிவகுரு

பொலிகண்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய செல்லத்துரை சிவகுரு (இளைப்பாறிய உடற்பயிற்சி சிகிச்சையாளரும், Physiotherapist பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகரும், செயலாளரும்) 29-04-93 இல் காலமானார். அன்னார் நிர்மலாதேவி (மணி)யின் அன்புக் கணவரும், உஷா, பிரகாஷ் (கண்ணன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், நமச்சிவாயம், பரஞ்சோதி (ரயில்வே திணைக்களம், கொழும்பு), சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
நா. நித்தியானந்தன்.

பொற்பதி வீதி,
கொக்குவில். (6146)

## கயிலாயபிள்ளை நவரத்தினம்

பலாலியைச் சேர்ந்த கயிலாயபிள்ளை நவரத்தினம் 30-04-93 இல் காலமானார்.

இவர் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், முகுந்தனின் (தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்) அன்புத் தந்தையும், கேதீஸ்வரன், தேவகி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் சுதுமலை இல்லத்தில் இன்று (01-05-93) காலை 9-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. முகுந்தன் (மகன்)

குருந்தடிப் பிள்ளையார் கோவிலடி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (5903)

## கந்தையா ஞானசெல்வம்

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா ஞானசெல்வம் (இளைப்பாறிய (ஜெயில் கார்ட்) நேற்று (30-4-93) இல் சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு திருமதி கந்தையா விசாலாட்சியின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற Dr திருச்செல்வம், சோமசுந்தரம் (இளைப்பாறிய அதிபர்), சங்கரப்பிள்ளை (F O, கௌரவில குரூப்அப்கொட்), பொன்னம்மா ஆகியோரின் சகோதரனும், சிவநடராசா (டென்மார்க்), தவராசா (U. K) மனோகரி, சத்தியதேவி, யோகலட்சுமி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இளையதம்பி (வாப்பா), வினோதினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நேற்று (30-4-93) புன்னாலைக்கட்டுவன் தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
சகோதரர்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். [5904]

## திருமதி இராசேந்திரம் செல்லம்மா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது பருத்தியோலை கந்தரோடையில் வசித்தவருமாகிய திருமதி இராசேந்திரம் செல்லம்மா 30-4-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசேந்திரம் (பொறியியலாளர், நீர்ப்பாசன திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வராசா (M P. C S LTD, சங்கானை) அன்புத் தாயாரும், இராஜேஸ்வரியின் அன்பு மாமியாரும், தியமூர்த்தி, பிரபாவதி (கொலன்ட்), பரமேஸ்வரன், யசோதரா (கனடா), குணநிதி (மாணவி, அருணோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், சுருதியா, தட்சாயினி ஆகியோரின் அன்புப் பூட்டியும், திரு. V. பொன்னம்பலம் (கனடா), திரு. V. S. மசிலாமணி (கனடா) ஆகியோரின் அன்பு பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கந்தரோடையில் இன்று (1-5-93) சனிக்கிழமை காலை 10 00 மணியளவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. செல்வராஜா
(குடும்பம்)

பருத்தியோலை,
(ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன் ஒழுங்கை),
கந்தரோடை. (5906)

## செல்லப்பா இரத்தினசபாபதி

(இளைப்பாறிய கல்விப் பரிசோதகர், கொழும்பு)

சுழிபுரத்தைச் சேர்ந்த விக்டோறியா கல்லூரி மனேஜர் காலஞ்சென்ற செல்லப்பா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற முன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவர், திரு. ந. க. அம்பலவாணர் தம்பதிகளின் சிரேஷ்ட மருமகனும், மல்லாகத்தைச் சேர்ந்த மகேஸ்வரியின் அன்புக் கணவருமாகிய செ. இரத்தினசபாபதி 29-04-93 வியாழக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்துவிட்டார்.

ஈமக்கிரியைகள் கிருலப்பனையில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. அ. ஜெகநாதன்
(மைத்துனர்)

17, கே. பி. கே. வீதி,
நல்லூர்.
(25475)

# கொலை விசாரணை நடத்துவதில் அரசு அசிரத்தைக் காட்டுகிறது

## விமர்சகர்கள் கருத்து

கொழும்பு, மே 1

லலித் அத்துலத் முதலியின் படுகொலைக்கு அரசாங்கமே காரணம் என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

ஆனால் ஜனாதிபதி பிரேமதாசா இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்து, தேர்தல் காலத்தில் அரசுக்கு அபகீர்த்தி உண்டாக்குவதற்காகவே எதிர்க்கட்சிகள் இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து வருவதாகச் சொன்னார்.

இத்தவேளை லலித்தின் படுகொலை குறித்து விசாரணை நடத்தி உண்மையை வெளிக்கொணர்வதில் அரசு அக்கறை காட்டவில்லை என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வியாழக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது அத்துலத் முதலியின் படுகொலை, அது சம்பந்தமான விசாரணை குறித்த தகவல்களை அறிவதற்காக பத்திரிகையாளர்கள் பலரும் கேள்விகளை எழுப்பினர்.

ஆனால் அமைச்சரவைப் பேச்சாளரோ, புதன்கிழமை நடந்த அமைச்சரவையில் படுகொலை விடயம் சேர்க்கப்படவில்லை என்றும், ஆராயப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு வெங்காயம், மிளகாய் இறக்குமதியை நிறுத்துவதில்தான் அதிக அக்கறையே தவிர படுகொலை குறித்தல்ல— என்று ஜஸ்வந்தர் சிங் என்ற விமர்சகர் தெரிவித்தார்.

லலித் படுகொலைக்கு அரசே காரணம் என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. அதற்குச் சாட்சியங்கள் இல்லை எனினும் பெரும்பாலான மக்கள் இக்கொலையில் அரசுக்குச் சம்பந்தம் இருப்பதாகவே கருதுகிறார்கள். பிரேமதாச அந்தக் குற்றச்சாட்டை நிராகரிக்கிறார். ஆனால் கொலை விசாரணைக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தென்படவில்லை. இவ்வாறு அரசு அசிரத்தையாக நடப்பதால் மக்கள் அதன் மீது சந்தேகம் கொள்ளவும், நாட்டில் அமைதியின்மை வளரவும் வழி சமைக்கும்— என்றும் அது பிரஸ்தாப விமர்சகர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

(அ 6)

# எனது நண்பன் லலித்தின் மரணம் வேதனை தருகிறது

## முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.

கொழும்பு, மே 1

''எனது நண்பனான லலித் அத்துலத் முதலிக்கு கொடூரமான முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த மரணம் எனது மனதில் மிகப் பெரிய வேதனையை ஏற்படுத்தியுள்ளது ''

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

லலித் அத்துலத்முதலியின் மரணம் தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜே ஆர் மேலும் கூறியதாவது:

''முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி இந்த நாட்டு மக்களுக்கு மேலும் பல ஆண்டுகள் சேவை செய்திருக்க் கூடியவர். லலித்தின் சிறப்பியல்புகளைப்பற்றி என்னால் இன்னும் பல விடயங்களைச் சொல்ல முடியும். ஆனால் அதற்கு இது நேரமில்லை.

இந்த வகையில் அமைந்த வன்செயல்கள் ஒரு ஜனநாயக சமூகத்துக்கு வெறுப்பூட்டுபவையாகவே உள்ளன. இந்தக் குற்றத்தைச் செய்தவர்கள் எதனை அடைவதற்கு முயன்றார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

லலித் ஒரு இளைஞர். அவரிடம் மிகுந்த திறமையும் நாட்டுப் பற்றும் காணப்பட்டது. எனது மகன் ரவியின் நண்பனாக லலித் இருந்தமையால் அவர் பாடசாலை மாணவனாக இருந்த காலத்திலிருந்தே நான் அவரை அறிந்திருந்தேன். லலித்தின் தந்தை கூட எனக்கும் எனது மனைவிக்கும் தெரிந்தவராகவே இருந்தார். அவர் அரச சபையில் என்னுடன் இருந்தார். தனது நாட்டுக்கும் தனது மக்களுக்கும் பல வருட காலம் சேவை செய்த ஒருவர் கோழைத்தனமான இந்த நடவடிக்கை காரணமாக எம்மிடமிருந்து பிரிக்கப்பட்டுவிட்டார். நாம் அவரது மனைவிக்கும் மகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.''

இவ்வாறு ஜெயவர்த்தனா தெரிவித்தார். (த-க)

## ஆயுள்வேத ஆணையாளருடன்

# சுதேச அமைச்சுச் செயலாளர் விரைவில் யாழ். வருவார்

யாழ்ப்பாணம், மே 1

யாழ். பலகலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேரில் ஆராய்வதற்கு சுதேச வைத்திய அமைச்சுச் செயலாளரும், ஆயுள்வேத ஆணையாளரும் யாழ்ப்பாணம் வருவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர் சங்கம் கடந்த மாதம் அமைச்சுச் செயலாளர் மற்றும் ஆயுள்வேத ஆணையாளர் ஆகியோரிடம் தமது பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறிய சமயம் தாம் நேரடியாக இங்கு விஜயம் மேற்கொள்ள விருப்பம் தெரிவித்திருந்தனர்.

யாழ்ப்பாணம் வருவதற்கான அனுமதியை விடுதலைப் புலிகள் வழங்கியுள்ள விடயத்தை அவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் —

மிக விரைவில் அவர்கள் இங்கு வருவார்கள் என்றும்— சித்த மருத்துவத்துறை மாணவர் சங்கத் தலைவர் என். வர்ணகுலேந்திரன் தெரிவித்தார். (ஓ-3)

## நாளை

ஈச்சமோட்டை இந்து இளைஞர் மன்றம், நாளை மாலை 3 மணிக்கு ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரர் ஆலயத்தில் நடைபெறும் வைபவத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். (த-17)

கலை, வர்த்தக
கல்லூரி
C.C.A.
வெலிங்டன் சந்திக்கு
அருகில் யாழ்ப்பாணம்
A/L 93
PAPER CLASS
தமிழ்
ஆசிரியர்:-
திரு. தங்கராஜா
ஆரம்பம்:- 02-05-93
நேரம்:- 10 மணி காலை
(சி/4975) - நிர்வாகி -

NEW SCIENCE
HALL
KANNATHIDY ROAD,
JAFFNA.
A/L 95
PURE/APP
MATHS
திரு. குணசிங்கம்
B. Sc. (Hons)
SAT, SUN 6-00-8-00
(சி/4974)

## பொன்விழா மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 1

காரைநகர் மணிவாசகர் சபை பொன்விழா மலர் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும்.

அறிஞர்களின் நாற்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளைக் கொண்ட மலரின் வெளியீட்டுக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை வகிப்பார்.

ஆத்மஜோதி நா. முத்தையா வெளியீட்டுரையை நிகழ்த்துவார். பேராசிரியர் அ சண்முகதாஸ் ஆய்வுரையையும், திரு த சிவகுமாரன், திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரைகளையும், பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை நிறைவுரையையும் நிகழ்த்துவார்கள்.

(க)

## முதுமாணி பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 1992 முதுமாணிப் பரீட்சை முடிவுகள் வெளியாகி உள்ளன

திரு. கே. கே. அருள்வேல் பொருளாதாரத்திலும், திரு டி. வின்சென்ட் பற்றிக் தத்துவவியலிலும் முதுமாணிப் பரீட்சையில் சித்திபடைந்துள்ளனர்.

(க)

## ஆலயங்களில்

நவாலி அட்டகிரி வில்வநாத சுவாமி கோவில் கும்பாபிஷேக வருஷ மணவாளக் கோலம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். (க)

o o o

வட கோப்பாய் அர்ச் சூசையப்பர் தேவாலய வருடாந்தத் திருநாள் கொண்டாட்டங்கள் இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

(க-51)

தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க
மேதின அறிவித்தல்

உழைப்பவர் உரிமை கோரும் உலகத் தொழிலாளர் தினமாம் இன்று, அனைத்து தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களினதும் அங்கத்தவர், பணியாளர், கூட்டுறவாளர் அனைவரும் மேதின அணிவகுப்பில் கலந்து உரிமைக் குரல் கொடுக்க வாரீர்.

ஊர்வலம் ஆரம்பம் :-
யாழ். செயலக முன்றில்
பொதுக் கூட்டம் :-
யாழ். பல்கலைக்கழக மைதான அரங்கு

தலைவர்
வடமாகாண தெ. ப. பொ. கூ. சமாசம்,
யாழ்ப்பாணம்.
(சி/5074)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருநெல்வேலி
ஸ்ரீ நீலாயதாக்ஷி ஸமேத ஸ்ரீகாயாரோஹண
பரமேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

**வருடாந்த மஹோற்ஸவம்**

நிகழும் ஸ்ரீமுக வருடம் சித்திரைத் திங்கள் 20ஆம் நாள் [03-05-1993] திங்கட்கிழமை காலை 10 மணியளவில் துவஜாரோஹணம் (கொடியேற்றம்) நடைபெறும்.

தொடர்ந்து 19 நாட்கள் மஹோற்ஸவம் நடைபெற்று, 20ஆம் நாள் பூங்காவன உற்ஸவமும் இடம்பெறும்.

**20 - 05 - 1993** வியாழன் பஞ்ச ரதோற்ஸவம்
**21 - 05 - 1993** வெள்ளி தீர்த்தோற்ஸவம்

தேர், தீர்த்தத் திருவிழாக்களின் போது காலை 7 மணியளவில் வசந்த மண்டபப் பூசை நடைபெறும்.

மஹோற்ஸவக் கிரியைகள் யாவும்
திருவருள் துணை கொண்டு
பிரம்மஸ்ரீ சதாயோகீஸ்வரக் குருக்கள்
தலைமையில் நடைபெறும்.

— ஸ்ரீகாயாரோஹணேஸ்வரர் தேவஸ்தானம்.

(சி-5070)



**BITSMANS**
**கல்வி நிறுவனம்,** மானிப்பாய்

புதிய பிரிவு
Spoken English
With
Grammar
BY
M. A. ஹரி B. A. Dip - in - Eng.
ஆரம்பம்: 03 - 05 - 1993
திங்கள் 9-00 a. m.

விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்

O/L 3 ஆவது பிரிவு DAY CLASS
04 - 05 - 1993 ஆரம்பமாகின்றன.

(சி-4965)



**கீன் கல்வி நிலையம்**
திருநெல்வேலி.

புதிய பிரிவு **A/L 95**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| அளவையியல் | — | எஸ். எஸ். மனோகரன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| வர்த்தகமும் நிதியும் | — | வரதன் |
| இந்து நாகரிகம் | — | சிவமகாலிங்கம் |
| தமிழ் | — | கனேஸ் |
| அரசியல் | — | கிருஸ்ணகுமார் |
| புவியியல் | — | பிரபல ஆசிரியர் |

ஆரம்பம்: 02 — 05 — 1993
ஞாயிறு காலை 8 மணி

★ O/L பகல் முழுநேர மீட்டல் வினா-விடை வகுப்பு ஆரம்பமாகிவிட்டது.

[சி-5073]


## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 05 — 07 — 1950



இறப்பு: 01 — 05 — 1977

**அமரர் குமரையா தேவராஜன்**

ஆண்டுகள் பல சென்றாலும், உங்கள் இனிய நினைவுகள் எமது அன்பு உள்ளங்களில் பசுமை குன்றாது இருக்கும்.

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;
மனைவி, மகன்மார்,
உற்றார், உறவினர்கள்.

இல. 28, றக்கா லேன்,
சுண்டிக்குளி.

(25472)

வடக்கு கிழக்கிற்கான

# ஆசிய அபி. வங்கியின் உதவி; தமிழ் மீனவர் புறக்கணிப்பு!

கொழும்பு, மே 1

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களின் புனர்வாழ்வுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய 20 கோடி 30 லட்சம் ரூபா நிதி உதவியைப் பெறுறுக் கொள்வதில் தமிழ் மீனவர்கள் புறக்கணிக்கப்படுவதாகவும், இனப் பாகுபாடு காட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் சிங்கள மீனவக் குடியேற்றங்களை ஊக்குவிக்க இந்த நிதி பயன்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

வன்செயல்களால் வடக்கு-கிழக்கின் சகல மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் இந்த உதவித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

வடக்கில் மன்னார் மாவட்டமும், கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களுமே இத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன-

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை இக் கடன் உதவி வழங்குவதில் தமிழர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றனர்.

இம்மாவட்டத்தில் படகுகளை வாங்க-17 லட்சம் ரூபா கடன் 89 பேருக்கு வழங்கப்பட்டது. இதில் ஒருவர் மட்டுமே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை—

வெளிமாவட்டங்களில் இருந்து திருகோணமலைக்கு வந்து குடியேறும் சிங்கள மீனவர்களுக்கு இக் கடனுதவி வழங்கப்படுகிறது. இந் நடவடிக்கை திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்திற்கு உதவி செய்வதாகவே இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில் சுமார் 600 மீனவர்கள் இந்தக் கடனுதவிக்காக விண்ணப்பித்த போதிலும், 75 பேருக்கு மட்டும் கடன் வழங்கப்பட்டது. ஆனால் இனிமேல் மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு கடனுதவி வழங்கப்படமாட்டாது என்று இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் அறிவித்துள்ளன. மன்னாரில் இருந்து வெளியேறிய தமிழ் மீனவர்கள் இன்றும் தமிழகத்திலேயே தங்கியுள்ளனர் என்பது தெரிந்ததே. (த-1)

## தங்கச்சங்கிலி யாருடையது?

யாழ்ப்பாணம், மே 1

உரும்பராய்ப் பகுதியில் சில நாட்களுக்கு முன்னர் தாம் கண்டெடுத்த பெறுமதிமிக்க தங்கச் சங்கிலி ஒன்றை இணுவில் கிழக்கைச் சேர்ந்த திரு. க. சுந்தரமூர்த்தி, உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

அதனைத் தவறவிட்டவர்கள் உரிய அத்தாட்சிகளைத் தெரிவித்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (அ)

## விசர் நாய்க்கடி

யாழ்ப்பாணம், மே 1

சென்ற காலாண்டு காலப் பகுதியில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் மட்டும் 6 பேர் விசர் நாய்க் கடியினா இறந்தனர். 1,846 பேர் நாய்க்கடிக்கு உள்ளானார்கள் இவற்றில் 275 பேர் கட்டாக்காலி நாய்களின் கடிக்கு உள்ளானார்கள்.

இதே காலப் பகுதியில் நெருப்புக்காய்ச்சலினால் 440 பேரும், வயிற்றுளைவினால் 391 பேரும் செங்கண்மாரியினால் 114 பேரும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். (த-162)

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி முதல் அரையாண்டு பரீட்சை - 1993

மேற்குறிப்பிட்ட பரீட்சை ஜூன் மாதம் 5ஆம், 6 ஆம், 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெறும்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து 17-05-1993க்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் தகுந்த பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டுடன் தங்களது பரீட்சை விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதை கவனத்திற்கொள்ளவும்.

—பதிவாளர்.

(சி-5072)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உயர்திரு
வை மு. பஞ்சலிங்கம்
(யாழ். மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபரும் -1981-1989)

தோற்றம்:
11 — 06 — 1934
மறைவு:
01 — 05 — 1989

மீளாத் துயரில் ஆழ்த்தி, என்றும் நீங்காத நினைவுறுத்தி, இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவனின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்;

- குடும்பத்தினர்.

நவாலி றோட்.

(இ-5069)

## உற்பத்தி எழுச்சிப் போட்டி: பரிசு பெறுவோர் விவரம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட உற்பத்தி எழுச்சி வாரப் போட்டியின் இறுதிக் கட்டப் போட்டிகள் கடந்த 27ஆம் திகதி ஊரெழு அம்மன் கோவிலடியில் நடைபெற்றன.

இவர்களுக்கான பரிசுகள் மே தினத்தையொட்டி இன்று நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்ட மேடையில் வைத்து வழங்கப்படும்.

போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு:

**தோட்டம் கொத்துதல்**

1—சினி துரைராஜா, சங்குவேலி. 2 — பொன்னுத்துரை சுமாகரன், சண்டிலிப்பாய். 3 — குண்டுமணி தர்மகுலசிங்கம், இமையாணன் கிழக்கு.

**துலாப் பட்டை மூலம் நீர் இறைத்தல் ஆண்கள்**

1 — தங்கவேலு தவச்செல்வம், பொன்னன தவநேசன், இமையாணன் கிழக்கு. 2 — வேலன் மதிலன், நாகமுத்து தட்சணாமூர்த்தி, ஏழாலை. 3 — கந்தன் தவராசா, துரையன் அழகேசன், இமையாணன்

**பெண்கள்**

1 — குமாரசாமி சுமதி, குமாரசாமி வசந்தி, வரணி 2 — கந்தசாமி தர்மஞானேஸ்வரி, கந்தசாமி தர்மரத்தினேஸ்வரி, வரணி. 3 — வல்லி அருந்தவம், கந்தையா தேவகுமாரி, வரணி.

**பனைமரம் ஏறுதல்**

1 - தில்லையம்பலம் அருமைத்துரை, புன்னாலைக்கட்டுவன். 2 – கணேசு இளஞ்சிங்கம், அல்வாய் வடக்கு. 3 - நடராசா இரதீஸ்வரன், அரியாலை.

**குட்டான் இழைத்தல்**

1 - கந்தசாமி செல்வநாயகம், வரணி. 2 - இரஞ்சிதராஜன் ரஞ்சனாதேவி, அல்வாய் வடக்கு. 3 - கந்தசாமி தர்மஞானேஸ்வரி, வரணி.

**கிடுகு பின்னுதல்**

1 - வே. பால்சாமி, யாழ்ப்பாணம், 2 - கட்டையன் பராசக்தி, வரணி. 3 - ஆ லீலாவதி, விக்னேஸ்வரா முகாம் சங்கானை

**உணவு தயாரித்தல்**

1 – சந்திர தேவநேசன், மானிப்பாய். 2 - சாந்தினி திருநவுக்கரசு, புத்தூர் 3 - திருமதி சந்திரவதனி அம்மாள் பொன்னம்பலம். ஆவரங்கால்

**பதனீர் உற்பத்தி**

1 - த யோகேந்திரம், பளை. 2 - பொ மாணிக்கசிங்கம், அரியாலை, 3 - முருகேசு விமலராசா, சங்கானை. (இ)


**புதிய பிரிவு A/L 95**
**கலை, வர்த்தகக் கல்லூரி**
**C. C. A.**
வெலிங்டன் சந்திக்கு அருகில் - யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு உதயன் |
| கணக்கியல் | — | திரு ஸ்ரீ |
| வர்த்தகம் | — | திரு இரட்ணம் |
| அளவையியல் | — | திரு சயந்தன் |
| இந்து நாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ் | — | திரு தங்கராஜா |
| புவியியல் | — | திரு வேலாயுதபிள்ளை |
| அரசியல் | — | திரு. பஞ்சாட்சரம் |
| கிறிஸ்தவ நாகரிகம் | - | திரு. விமலதாஸ் |

ஆரம்பம்: 02—05—1993 காலை 8 00 மணி

குறிப்பு:- மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதனால் முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

- நிர்வாகி.

(சி 4964)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சுகாதார முறைப்படி வறுத்துத் திரித்த தரமான சன் பிறாண்ட் மிளகாய்த் தூள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (25332)

நாய்க் கூடுகள் விற்பனைக்குண்டு. I. K. நடேசன், ''நந்தினி வாசா'' இல. 15, மகேந்திரன் வீதி, (மலர்மகள் வீதி), அரியாலை. (25469)

## ஆடு விற்பனைக்கு

சடைச் சணல், சணல் ஆடுகள் ஜமுனாபாரி காமோரி சேலம் கலந்த ஆடு விற்பனைக்குண்டு. அத்துடன் குட்டி ஈன்ற ஒரு மாத அளவிலான பால் ஆடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: V. K. M Farm Center, இல. 12, கனகசபை லேன், (யாழ். இந்துக் கல்லூரி பின் பக்கம்), யாழ்ப்பாணம். (25466)

## கம்பியூட்டர் விற்பனைக்கு

புதிய Sony ரக கணனி H.B 75D விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜீவனா படப்பிடிப்பாளர்கள், பிரதான வீதி, சாவகச்சேரி. (6144)

## நீம் தூபம்

சுகவாழ்வுக்கு காலை, மாலை நீம் தூபம் இதமான இயற்கை நறுமணம் கொண்டது. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. ''மில்க்வைற்'' (சி-5058)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் பெருகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்கள். தினமும் காலை 8-30—12 30, பி.பகல் 3-00—6-00. த. சிவானந்தன், பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (25416)

## தேவை

நல்ல நிலையில் உள்ள ஹை. ஏ. எஸ். வான் (டீசல்) அல்லது E L F. ட்றக், டீசல் கார் உடன் தேவை. தொடர்பு: சனி, ஞாயிறு காலை 9—12, மாலை 3—6 வரை, Sritharan, Becon கல்வி நிலையம், யாழ்ப்பாணம். (6131)

T. V. வீடியோ டெக், றேடியோ திருத்த தெரிந்தவர்களும், தொழில் பழக விரும்புபவர்களும், பாடல் பதிவுசெய்ய தெரிந்தவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை. தொடர்பு: நியூ விக்ரேஸ் எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ், B.M C. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6148)

ஆலய பாவனைக்காக (.5K. VA.—1.5K VA) மண்ணெண்ணெய்யில் இயங்கக் கூடிய ஜெனரேட்டர் தேவை. தொடர்பு: மெதடிஸ்த திருச்சபை, CLS புத்தகசாலை, 570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-4968)

## குளிர்பானங்கள்

Sunrise குளிர்பானங்கள் கோடியல்கள் சுத்தமானவை; சுவையானவை. பருகிக் களிப்படைவீர். தயாரிப்பும் விநியோகமும். Siva Industries, 35/3, Colombogam Road, Chundikuli. (சி-5061)

PERSONAL
NEW SCIENCE CENTRE
Elilakam Front Lane
Jaffna
95 A/L
விஞ்ஞானப் பிரிவு
மட்டும்
★ II வது பிரிவு ★
ஆரம்பம் :— 02 05-93
1 30 pm
(சி/5065)

## பணிப்பெண் தேவை

வளர்ந்த மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு 50 வயதிற்கு உட்பட்ட பணிப்பெண் தேவை. தொடர்பு கொள்க: S. M டோமினிக், இல. 32, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (25424)

## தவறிவிட்டது

பருத்தித்துறைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் 27-04-93 அன்று Integrated Rural Development - Jaffna District என்ற புத்தகம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அ. சோமசுந்தரம்பிள்ளை, துன்னாலை தெற்கு, துன்னாலை அல்லது மேர்க்சன்ற் பினான்ஸ் லிமிட்டெட், 555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (25434)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம்சந்தி, யாழ்
SPOKEN ENGLISH
By
BRITTO
ஆரம்பம்: 02-05-1993
காலை 11 - 00மணி
[சி/4970]

பிரத்தியேக வகுப்புக்கள்
A/L 95
புதிய பிரிவு
ஆரம்பம்: 02-05—93
ஞாயிறு மாலை 4-30
பொருளியல் — மகேந்திரன்
வர்த்தகம் — பசில்
கணக்கியல் — SAM
அளவையியல் — சோதிலிங்கம்
சுபேன் கல்வி நிலையம்
யாழ்ப்பாணம்.
(எழிலகம் அருகாமை)
(25471)

யாழ் இந்து மகளிர் கல்லூரியின்
பொன் விழா தொடர்பான

## பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

பழைய மாணவிகள் தமது பங்களிப்பைப் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் வழங்குவது சம்பந்தமாக ஆலோசிப்பதற்காக மே மாதம் 5ஆம் திகதி காலை 9-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம்.

செல்வி. பு. செல்வநாயகம்,
தலைவர்.

(25470)

## நன்றி

### செல்வி வெண்ணிலா கைலைநாதன்

(அளவெட்டி)
(யா/ யூனியன் கல்லூரி - உயர்தரம் கணிதம் - 94)

எமது அருமைப் புதல்வி வெண்ணிலாவின் பிரிவுச் செய்தியை அறிந்து நேரில் வருகை தந்தும், அனுதாபச் செய்தி அனுப்பியும், எமது பேரிழப்பில் பங்கு கொண்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தந்தை, தாய், சகோதரன்,
குடும்பத்தினர்.

தற்போதைய முகவரி:
பிள்ளையார் கோவிலடி,
சங்குவேலி வடக்கு. (25487)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மகேஸ்வரி திருநாவுக்கரசு

(யாழ். மத்திய கல்லூரி, இளைப்பாறிய ஆசிரியை)

தோற்றம்: 28 — 10 — 1926
மறைவு: 26 — 04 — 1988
திதி: 01 — 05 — 1993

ஓடி மறைந்தன ஆண்டு ஐந்தாயினும்,
நாடித் துடிப்பாய் நின் உணர்வில் யாம்.

- குடும்பத்தினர்.

62, மணல்தறை ஒழுங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி/4952)

## பிரிவுத்துயரினிலே...!



செல்வன்
### நடராஜா குணவதன்

சேர்ந்திருக்க: 20 — 06 — 1973
பிரிந்திருக்க: 01 — 05 — 1986

தம்பி!
அன்று நீ
அன்பெனும் சமுத்திரத்திலே
அறிவென்னும் தெப்பமாய் -
உலா வந்தாய்!



திருமதி
### நல்லம்மா ஆறுமுகம்

சேர்ந்திருக்க: 26 — 12 — 1904
பிரிந்திருக்க: 19 — 05 — 1986

அம்மம்மா!
இன்றோ நாம்
அன்பென்னும் ஏக்கத்திலே
பிரிவென்னும் நோயால்
அன்புத்திருமுகம் பார்க்கும்
திருநாள் எப்போது -
வருமென ஏங்குகிறோம்!

பிரிவிலே மூழ்கியிருக்கும்;

அப்பா, அம்மா, அச்சாக்கா, ஆசையக்கா, உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள்.

மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

Dr. V. S. நடராஜா,
சண்டிலிப்பாய். ([illegible])

## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம்: 27 — 03 — 1948
மறைவு: 11 — 05 — 1992



### திருமதி சுப்பிரமணியம் பராசக்தி

''நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று கடந்து விட்டது என்றாலும், உங்கள் நிழல்; உங்கள் ஆத்மா எம்மோடு தான்.''

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
கணவர், பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிகள், மருமக்கள், உற்றார்,

நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (25432)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# மேதின மனக்கரு

இன்று உலகத் தொழிலாளர் நாளான மே தினமாகும். தொழிலாளர்களின், பாட்டாளிகளின் உழைக்கும் சக்தியைச் சுரண்டி அவர்களை முற்றுமுழுதான இயந்திரங்களாக்கி அடிமை நிலையில் வைத்து வேலை வாங்கிய இருண்ட சகாப்தத்திற்கு சாவுமணி அடிப்பதில் ஆரம்ப வெற்றி கிடைத்த நாளை நினைவுபடுத்தும் தினமாகும்.

சிக்காகோ நகரில் நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக தொழிலாளருக்குக் கிடைத்த முதலாவது உரிமை ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலையாகும். அதில் தொடங்கி கடந்த 107 வருடங்களில் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கான உரிமைகளைப் பெற்றுவிட்டார்கள். போராடாமலே பெற்ற நூற்றுக்கணக்கான சலுகைகளை அனுபவிக்கிறார்கள்.

பொருளாதார வளமுள்ள மேலைநாடுகளில் அரசாங்கமாயினும் சரி, ஏனைய வேலை கொள்வோராயினும் சரி தமது பணியாளர்களுக்குத் தாமாகவே பல புதிய வசதிகளையும், சலுகைகளையும் வழங்குகிறார்கள்.

எனினும் அபிவிருத்தி அடைந்து வரும் ஸ்ரீலங்கா போன்ற நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும் தொழிலாளர்கள், பணியாளர்கள் தமக்குரிய எல்லா உரிமைகளையும் பெற்றுவிட்டார்கள் என்று சொல்வதற்கில்லை.

அரசாங்க துறையில் கூட பணியாளர்களுக்குரிய உரிமைகள், சலுகைகள் நலன்களில் பெரிதாக மாற்றம் ஏற்படவில்லை தனியார்துறை மற்றும் தனிப்பட்ட வேலை கொள்வோர் இன்னமும் தமது சுரண்டும் மனப்பான்மையை முற்றாகத் துறந்து விடவில்லை

தமிழ்ப் பிரதேசம் பல நூற்றாண்டுகாலமாகவே நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவக் கட்டமைப்புக் கொண்டதாக விளங்கிற்று வைதிகக் கொள்கைகளுக்கு ஆட்பட்டவர்களாகவும், ஒருவர் மீது மற்றவர் ஆதிக்கமும், அதிகாரமும் செலுத்தும் மனப்பாங்கினராகவும் விளங்கிய மூதாதையினரின் சந்ததியினர் அல்லவா நாம்?! பொருளாதார வலிமையைத் தமதாக்கிக் கொண்டு அந்த வசதி வாய்ப்பில்லாதவர்களை அடிமை, குடிமைகளாக நடத்திய, சுரண்டி வாழ்ந்த சமூகக் கட்டமைப்பு தமிழரின் பெரும் சாபக்கேடு

பொருளாதார வசதி, செய்யும் தொழில் ஆகியவற்றை அளவு கோல்களாக வைத்து ஒரு சாரார் உயர்ந்தவர்களாகவும், வலிமை உள்ளவர்களாகவும் உருவகிக்கப்பட்டு, மறு சாரார் தாழ்ந்தவர்களாகவும், மெலியார்களாகவும் ஆக்கப்பட்டு மேலோங்கி நின்ற சமூக அடக்குமுறைகள், சுரண்டல்கள் இன்று ஓரளவுக்கே கருகி அருகிப் போய் உள்ளன.

அரசியல் விடுதலைப் போராட்டம் எழுச்சி பெற்றதாலேயே இந்தளவு மாற்ற நிலையேனும் தோன்றி உள்ளது. தமிழ் மக்கள் அரசியல் விடுதலை பெறும் போது பொருளாதார விடுதலையும், சமூக விடுதலையும் ஆகக்குறைந்தது சமகாலத் தவையாகவேனும் இருக்க வேண்டும். அரசியல் விடுதலை அர்த்தமுள்ளதாக அமைவதற்கு பொருளாதார, சமூக விடுதலைகள் அதனை முந்திக் கொண்டு வருவதே சிறப்புடைத்தாகும்.

அரசியல் விடுதலை நோக்கி உரிய வழியில் உரிமைப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. தன்னிறைவான சுய சார்புப் ,பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி பொருளாதார விடுதலை பெறவும், வரட்டுச் சமூகக் கட்டமைப்பை உடைத்தெறிந்து, துகள்துகளாக்கி, சமத்துவமான புதிய சமூக கட்டுமானத்தை நிர்மாணித்து சமூக விடுதலை பெறவும் தீவிரமான உகந்த நல்வழிகளில் நடக்கத் தொடங்க வேண்டும்.

இரத்தம் சிந்தாத அமைதிப் புரட்சிகள் அந்த இரண்டு துறைசார்ந்த விடுதலைகளுக்கும் அவசியம். இன்றைய மே தினத்தில் அதனை எழுச்சி மிகு மனக்கருவாக்குவோமாக!

# புரட்சிக் குரல் எழுப்பும் தமிழீழ மக்களின் மேதினம்

1886 ஆம் ஆண்டு தொழிலாளர் 8 மணி நேர வேலைக் கோரிக்கையை முன்வைத்துப் போராடினார்கள். அன்று, ஒரு நாளில் 12 மணித்தியாலங்களுக்கு மேலும் அவர்கள் அடிமைபோல் வேலை செய்தார்கள். சிகாகோவில் இடம்பெற்ற ஒரு அமைதிப் போராட்டத்தின்போது பல தொழிலாளர் ஆட்சியாளரின் ஆயுதப் படையின் துப்பாக்கிகளுக்கு இரையானார்கள். துப்பாக்கிகளுக்கும் அஞ்சாத தொழிலாளர் தொடர்ந்து முன்னெடுத்த போராட்டங்களின் பயனாக 8 மணிநேர வேலை என்ற — இன்று நடைமுறையில் இருக்கும் — உரிமையை வென்றெடுத்தனர்; அந்த நாளை நன்றியுடன் இன்றும் கொண்டாடி வருகின்றனர். தொழிலாளரின் அத்தகைய உரிமைக் கோட்பாட்டை விளக்கி, வலியுறுத்தி ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது மே தினம்.

1889 இல் பாரிஸ் நகரில் இடம்பெற்ற சர்வதேச சமதர்ம மாநாட்டில் மே முதல் திகதியை விடுமுறை நாளாக ஏற்றுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது அன்று முதல் மே மாதம் முதல் திகதி உழைக்கும் வர்க்கத்தின் விடுமுறை நாளாக இருந்து வருகிறது.

உரிமை மறுக்கப்படும் தொழிலாளிக்காகவும், ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்காகவும் குரல் எழுப்பும் உரிமை இடதுசாரிகளுக்கு மட்டும் இருப்பதாகக் கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. இடதுசாரிகள் தொழிலாளரின் உரிமைகளைப் பாரபட்சமற்ற முறையில் அணுகவில்லை; இந்தநாட்டில் இடதுசாரிகள் புரிந்த தவறு பொதுவுடைமைக்கோட்பாட்டையே உடைத்தெறிந்தது. சிங்கள அரசுகள் இந்த நாட்டில் வாழும் தமிழ் சிறுபான்மையினரை ஒவ்வொரு துறையிலும் உரிமையற்றவர்களாக்கி வைத்தபோதெல்லாம் பொதுவுடைமைவாதிகள் சிறுபான்மை இனத் தொழிலாளரின் உரிமைகளுக்காகப் போராடத் தவறிவிட்டனர்.

''நன்றும் தீதும் பிறர்தர வாரா'' என்பதற்கேற்ப தமது உரிமைகளைத் தாமே போராடிப் பெற வேண்டும். பிறர் கையை எதிர்பார்த்தல் பயன்தரா என்றுணர்ந்த தமிழ்த் தொழிலாளர் 1960 களில் மொழிவழித் தொழிற்சங்கங்களை அமைத்து தமது உரிமைகளைக் கேட்கும் அளவுக்கு தள்ளப்பட்டனர் அதே போன்று அரசியலிலும் ஜனநாயகம் தவறான பாதையில் திரும்பியது. தமிழ் அரசியல் கட்சிகள் ஏமாற்றப்பட்டன. தமிழ் இனத்தின் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டன.

சிறுபான்மைத் தமிழினத்தை அடக்கி ஆட்சி புரியும் சிங்கள அரசுகள், நாடு சுதந்திரமடைந்து நாற்பதாண்டுகள் கடந்த பின்னரும், உலகின் அரசியல் மாற்றங்களை அவதானிக்கும் தம் போக்கை மாற்றிக்கொள்ளாத நிலையில், தமிழ் இனத்தின் ஆயுதப் புரட்சியைக் கண்டு அஞ்சுகின்றன

இன்று தமிழ் ஈழ மக்கள் மேதினத்தைக் கொண்டாடும் போது உலகத் தொழிலாள வர்க்கத்தின் காதுகளில் ஒரு புரட்சிக்குரல் தமிழ் ஈழத்திலிருந்து கேட்கிறது.

இன்று, மிக அருகில் ஆட்சியாளரின் துப்பாக்கிகள் எம்மை நோக்கி நிற்கின்ற வேளையிலும். அரசு சிறைகளிலும், அகதி முகாம்களிலும், காடுகளிலும் மரநிழல்களிலும் தமிழினம் அலங்கோல வாழ்க்கை வாழ்கின்ற நேரத்திலும், தமிழீழ மண்ணில் சுதந்திரமாக மே தினத்தை நாம் கொண்டாடுகிறோம்.

- எஸ். பி. கே -

★

# இன்றைய பேரணி, கூட்டம் தொடர்பான ஒழுங்குகள்

யாழ்ப்பாணம் மே 1

இன்று பிற்பகல் 2 - 00 மணிக்கு யாழ். செயலகத்துக்கு அருகில் இருந்து ஆரம்பமாகும் மேதினப் பேரணி பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்துடன் முடிவடையும்.

பேரணியில் கலந்து கொள்ளும் அணிகளின் ஒழுங்கு, மற்றும் ஊர்திகள் தரிப்பிடம், தாகசாந்தி நிலையங்கள், முதலுதவி மையங்கள் மற்றும் விவரங்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையினால் தரப்பட்ட ஒழுங்கு முறைகள் வருமாறு:

### அணிவகுப்பு ஒழுங்கு

தேசியக்கொடி அணிவகுப்புக்கள், கூட்டுறவுத்துறை. கல்விசார் ஊழியர்கள், உள்ளூராட்சித் திணைக்களம், சுகாதாரப் பகுதி, வங்கி ஊழியர்கள், குடிசார் பொறியியல் துறை, வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கடற்புலிகள், வலிகாமம்

★ அவ்வவ் அணிகளுக்கு இடையில் ஊர்திகள் செல்லும்.

### ஊர்திகள் தரிப்பிடம்

ஊர்திகள் பிறவுண் வீதி வந்து, கலட்டிச் சந்தியிலிருந்து நாச்சிமார் கோயில் வீதி வழியாக வந்து யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மைதானத்தில் தரித்து நிற்பாட்டப்படும்.

### மீளச் செல்வதற்கான வாகன தரிப்பிடங்கள்

★ தென்மராட்சிக் கோட்ட வாகன அணி (இல. 01-100) திருநெல்வேலிச் சிவன் கோவிலில் (சென்றல் நேசிங் ஹோம்) தரித்து நிற்கும்.

★ வடமராட்சிக் கோட்ட வாகன அணி (இல 101-200) திருநெல்வேலிச் சந்தைக்கு முன்னால் தரித்து நிற்கும்.

★ தீவகக்கோட்ட வாகன அணி (இல 201-250) கலட்டிச் சந்தியில் தரித்து நிற்கும்.

★ கடற்புலிகள் கோட்ட வாகன அணி இல 251-300) ஆத்தி சூடி வீதியில் தரித்து நிற்கும்.

★ வலிகாமம் கோட்ட வாகன அணி (இல 301-மேல் நாச்சிமார் கோயிலுக்கு அண்மையில் தரித்து நிற்கும்.

★ கோப்பாய் வட்ட வாகன அணி பொற்பதி வீதியில் தரித்து நிற்கும்.

### சைக்கிள் தரிக்கும் இடங்கள்

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மைதானம், திருநெல்வேலிச் சந்தைக்கு முன்பாக, கொக்குவில் இந்துக் கல்லூரி, திருநெல்வேலி சிவன் கோவில்.

### தாகசாந்தி நிலையங்கள்

செயலக முன்பாக (கண்டி வீதி), கச்சேரி நல்லூர் வீதி (சுண்டுக்குளி தபாற் கந்தோர் முன்பாக). சோமசுந்தரம் வீதி, பஸ்ரியன் வீதிச்சந்தி, நல்லூர் கோவில் பின் வீதியில், நல்லை ஆதீனம் முன்பாக, கூட்ட மைதானத்தில்

### முதலுதவி மையங்கள்

யாழ் செயலகம், கண்டி ஆஸ்பத்திரி வீதிச் சந்தி, ஆஸ்பத்திரி கோவில் வீதிச் சந்தி, நாவலர் வீதிச் சந்தி கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், பாரதி சிலை ஆலடிச் சந்தி. இந்துமகளிர் ஆலடிச் சந்தி, கந்தர்மடம் சந்தி, நாச்சுன்று, கலட்டிச் சந்தி, தொழில்நுட்பக் கல்லூரி, மைதானம், புகையிரத நிலைய பின்புறச் சந்தி,

தற்காலிக காவல்துறை நிலையம் வளாக மைதானத்தில் அமைந்த செயலகம்.

### பொதுக் கூட்டம்

பேரணி நிறைவடைந்ததும் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகும்.

(மேதினப் பேரணி செல்லும் பாதை பற்றிய விவரமும் — பேரணி ஆரம்பமாவதற்கு முன்னர் கோட்ட ரீதியாக அணிகள் தரித்து நிற்கும் இடங்கள் பற்றிய விவரமும் — நேற்றைய உதயனில் பிரசுரமாகி இருந்தன.) (இ)

## 80 க்கு முன் பதவி 2 ல் இருந்தவர்கள்

# பிரதிப் பணிப்பாளர்களாக பதவி உயர்வு பெறுவர்?

யாழ்ப்பாணம், மே 1

1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் விசேட பதவி 2 இல் உள்ள அனைத்து ஆசிரியர்களும் 21-4-1982 இல் இருந்து நடைமுறைக்கு வரக்கூடியதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக பதவி உயர்வு பெறவுள்ளனர்.

இதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்

1980 ஆம் ஆண்டில் விசேட பதவி 2 இல் உள்ளவர்கள் அனைவருக்கும் 21 - 4 - 1982 இலிருந்து கல்விச் சேவை வகுப்பு 5 க்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு — 1-1-1988 இலிருந்து கல்வி நிர்வாக சேவை வகுப்பு 3 க்கு (ஆ...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட மாநாடு

யாழ்ப்பாணம், மே 1

யெகோவாவின் சாட்சிகளின் விசேட ஒருநாள் மாநாடு, நாளை ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி மெதடிஸ்ட் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், மேமாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி பேரம்பலம் வீதியில் அமைந்திருக்கும் இராஜ்யமன்றத்திலும் நடைபெறும்.

''தெளிந்த புத்தியோடும், நீதியோடும் வாழ்தல்'' என்பது இம்மாநாட்டின் பொருள்.

நிகழ்ச்சிகள் காலை 9 55 மணிக்கு ஆரம்பமாகும் பிற்பகல் நிகழ்ச்சிகளில் 2. 55 மணிக்கு ''மகிழ்ச்சியில்லாத ஒரு உலகத்தின் மத்தியில் உங்கள் ஆசீர்வாதங்களை அருமையானதாக காத்துக்கொள்ளுங்கள்'' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தப்படும். [க]

## மூன்றாவது கட்டமாக மண்எண்ணெய்

யாழ்ப்பாணம், மே 1

யாழ் மாவட்டத்தில் உள்ள குடும்பங்களுக்கு மூன்றாவது கட்டமாக குடும்ப அட்டைக்கு இரண்டு லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்படவுள்ளது

நேற்று நில்கிரி கப்பல் மூலம் ஆயிரத்து 700 பரல் மண்எண்ணெய் எடுத்துவரப்பட்டதை அடுத்து மண்எண்ணெயைப் பங்கீடு செய்து விநியோகிக்கும் வேலை உடன் ஆரம்பிக்கப்பட விருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்ட உடனேயே அங்குவைத்து அவற்றை ப. நோ. கூ சங்கங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், மே 1

கடந்த ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் திகதி திருமலை கந்தளாயில் படையினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விழுப்புண் அடைந்திருந்த போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

லெப்டினன்ட் அன்ரன் அல்லது மாமூலன் (ஜோர்ஜ் அன்ரன் ரமேஸ் — காந்திநகர் — திருமலை) என்ற போராளியே வீரச்சாவடைந்தார். (உ-5)

## எழுந்திட வேண்டு மே தினம்

உழைக்கும் கரங்கள்
உயர்வை உணர்த்திடும்
ஒரு திரு நாள் மே தினம்
- இந்த
எழுச்சியில் எங்கள்
உழைப்பவன் குடிசையில்
விளக்கெரியும் நாளே பெருமிதம்
- இந்த
எண்ணமும் வேகமும்
எல்லோரின் நெஞ்சிலும்
எழுந்திட வேண்டு மே தினம்

- சண்முகபாரதி.

## உலகீரே ஒன்று சேர்வீர்!

உழைப்பாளர் உவந்திடும் ஒருநாள்
உலகம் கொண்டாடும் திருநாள்
அழைப்பார்கள் எல்லோருமொன்றாய்
அவர் நலனில் அக்கறை கொள்வர்
இழைகள்பல ஒன்றானால் அதன்
இயல்பு உரம் பெறுவது போலே
மழைத்துளிகள் பலசேர்ந்துபெருகி
வரும்வெள்ளம் ஆவது போலே
உழைப்பாளி உரிமை யெல்லாம்
உண்மையிலே பெற்று மகிழ
உழைத்திடுவோம் மேதினத்தில்
உலகீரே ஒன்று சேர்வீர்

- வ. யோகானந்தசிவம்.

## உழைக்கும் கரங்களின் உன்னதத் திரு நாள்

உரமது மிக்க உழைக்கும் கரங்கள்
உயர்வாம் தொழிலை ஆற்றும் கரங்கள்
திரண்ட சக்தியாய் ஓங்கிய கரங்கள்
சிக்காகோ நகரில் உயர்ந்த கரங்கள்
புரட்சியைச் செய்த புதுமைக் கரங்கள்
பாரினை ஆக்கும் பெருமைக் கரங்கள்
தரமிகு வாழ்வினை நாடும் கரங்கள்
ஐக்கிய வழிச்செல்லும் அற்புதக் கரங்கள்!

- நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.



இனம் காணப்படாத துப்பாக்கி நபரினால் படுகொலை செய்யப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும், முன்னாள் தேசிய பாதுகாப்பு அமைச்சருமான லலித் அத்துலத் முதலியின் பூதவுடல் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்

சோகம் தோய்ந்த நிலையில் திருமதி சிறிமானி அத்துலத் முதலியும், மகள் சேராளாவும் பூதவுடல் மீது றோசா மலர்கள் வைக்கின்றனர்.

## வன்செயல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் குறித்து சட்டமா அதிபரின் கவனத்தை ஈர்க்குமாறு அவர்கள் தேர்தல் ஆணையாளரைக் கேட்டுக் கொண்டனர்.

இதற்கிடையில் —

வெடிகுண்டுகளுடன் இரு வாகனங்கள் தலைநகருக்குள் வந்திருப்பதாக அரசு சார்புப் பத்திரிகையில் வெளியான செய்தியை சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு பொலீஸார் வழங்கவில்லை என்றும்—

இராணுவப் புலனாய்வுப் பிரிவிடமிருந்தே அச்செய்தியை அப்பத்திரிகை பெற்றுக் கொண்டது என்றும்— பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா தெரிவித்தார்.

ஆனால்—

மேற்படி செய்தியை இராணுவமும் மறுத்திருப்பதாக பி. பி. ஸியின் சிங்கள சேவை அறிவித்தது.

(உ-6)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி விசாலாட்சிப்பிள்ளை

சுன்னாகம் கிழக்கு கப்பம்புலத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி விசாலாட்சிப்பிள்ளை 30-4 93 இல் சிவபதமெய்திவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கு சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், தம்பிப்பிள்ளை வில்வரத்தினம் (இளைப்பாறிய மயிலிட்டி கிராம சபை மின் அத்தியட்சகர்), சிவராசா (இளைப்பாறிய மின்சாரப்பகுதி, சுன்னாகம்), தேவதாசன் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகஸ்தர்), சவுந்தரநாயகம் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆ. தம்பிப்பிள்ளை (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்), இராசமணி, மங்கையர்க்கரசி, கிருஷ்ணவேணி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (1-5-93) சனிக்கிழமை காலை 10 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கொத்தியால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. தம்பிப்பிள்ளை
(இளைப்பாறிய தலைமை ஆசிரியர் சுன்னாகம்)

கப்பம்புலம்,
சுன்னாகம் கிழக்கு.
(5902)

## சரவணமுத்து இராமநாதன்
## (இராமு)
## [நயினாதீவு]

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், ஊர்காவற்றுறை பிரபல வர்த்தகருமான திரு சரவணமுத்து இராமநாதன் வெள்ளிக்கிழமை 30 04-93 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், விஜயராணி, சிவநாதன் (அதிபர், கொழும்பு முகத்துவாரம் இந்துக் கல்லூரி), சியாமளாதேவி (ஆசிரியை, கனடா), சிதம்பரேஸ்வரி, லோகநாதன் (இலிகிதர், வேலணை பிரதேச சபை), பரமேஸ்வரி, காலஞ்சென்ற யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் திருமாகரன், சிவகரன் (ஜேர்மனி), பிரேமா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சதானந்தன் [சுவிஸ்], துரைராசா [கனடா], வல்லிபுரம் [பிரான்ஸ்], யோகநாதன் [பிரான்ஸ்], இதயமலர் (ஆசிரியை), ரதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. லோகநாதன்
(மகன்)

74/1, கலாசாலை றோட்,
திருநெல்வேலி.

[25177]

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம்பக்கத்தில்

## அதிரடி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கூட்டிக் கொண்டு உணவருந்தச் சென்ற பொலீஸார் அவ்வேளை கைதிகளுக்கு விலங்குப் போடவில்லை என்றும் ஜெயலலிதா குறிப்பிட்டார்.

இது சம்பந்தமாக இரு உயரதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

தப்பிச் சென்ற கைதிகளில் ஒருவரான கிருபன் என்பவர் பத்மநாபா உட்பட 13 பேர் கொலை செய்யப்பட்ட வழக்கில் ஒரு குற்றவாளி என்றும் அவர் கூறினார்.

அதிரடித் தாக்குதல் மூலம் கைதிகள் மீட்கப்பட்ட சம்பவம் குறித்து சட்டசபையில் கேள்வி எழுப்பிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ரி. பழனிச்சாமி—

முதல்வர் தமது அறிக்கையில் ஓர் இடத்தில் கூட கைதிகளை மீட்டவர்கள் விடுதலைப் புலிகள் என்று குறிப்பிடாதது ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கிடையில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும் சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும், இந்தச் சம்பவத்தைக் கடுமையாகக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இல்லை என்று மாநில அரசு கூறிவருவது அப்பட்டமான பொய் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டிருப்பதோடு தமிழ்நாடு அரசின் மெத்தனப்போக்கையும் இந்தச் சம்பவம் காட்டுகின்றது என்று வாழப்பாடி குறிப்பிட்டுள்ளார்.

(உ-எ-க)

## தீவிரவாதிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலைக்கு பொலீஸார் தமது வானில் கூட்டிச்சென்றனர்.

பாளையங்கோட்டைக்குப் புறப்பட்ட பொலீஸ் வானில் நான்கு கைதிகளுக்கும் பாதுகாப்பாக ஒரு சப் இன்ஸ்பெக்டரும் மூன்று கான்ஸ்டபிள்களும் கூடச் சென்றனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் சென்னையில் இருந்து புறப்பட்ட இந்த வான் அன்றிரவு 11 மணியளவில் மதுராந்தகம் அருகே மாமண்டூரில் வீதி ஓரத்தில் ஒரு ஹோட்டல் அருகே நிறுத்தப்பட்டது

கைதிகளும் பொலீஸ்காரர்களும் அந்தஹோட்டலில் சாப்பிட்டு, விட்டு வானை நோக்கி திரும்பிக்கொண்டிருந்த போது, திடீரென அம்பாஸிடர் கார் ஒன்று அங்கு வந்து நின்றது.

அந்தக் காரில் இருந்து நான்கு விடுதலைப் புலிகள் குதித்து, பொலீஸாரை நோக்கி ஏ. கே. 47 துப்பாக்கிகளால் சுட்டனர் அப்போது மோகன் என்ற கான்ஸ்டபிள் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இன்னொரு கான்ஸ்டபிள் சக்கரவர்த்தி படுகாயமடைந்தார். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மூன்று கைதிகள் அம்பாஸிடர் காரில் தப்பிச் சென்றனர் எனினும் விக்டர் என்ற கைதி தப்பிச் செல்லவில்லை

தீவிரவாதிகள் பயன்படுத்திய அந்த அம்பாஸிடர் கார் நேற்று முன்தினம் மகாவலிபுரம் அருகே திருவிடந்தை என்ற இடத்தில் இனந்தெரியாத குழு ஒன்றால் கடத்தப்பட்டதொன்று எனத் தெரிவதாக இந்திய வானொலி அறிவித்தது

பயங்கரமான ஆயுதங்களை வைத்திருந்த குழு ஒன்று அம்பாஸிட்டர் காரை வழிமறித்து, காரின் சாரதியை பலவந்தமாகத் தள்ளிவிட்டு காரைக் கடத்திச் சென்றது இந்தக் குழுதான் கைதிகளை அதிரடித் தாக்குதல் நடத்தி மீட்டுச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

தப்பிச் சென்ற மூன்று தடா கைதிகளும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய [illegible] கூறப்பட்டது.

(உ-எ-க)

# தோட்டங்களில் பிரசாரம் எதிர்க்கட்சிகளுக்கு மறுப்பு

## மலையக முன்னணி கண்டனம்

கொழும்பு, மே 1

அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டப் பகுதிகளில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தி வருகிறது—

ஆனால் ஏனைய எதிர்க்கட்சிகளுக்கு இச்சலுகை மறுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணிப் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மலையக மக்கள் முன்னணி மலையகத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் இ. தொ. கா வுக்கு சவாலாக — போட்டியாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் —

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டிருக்கும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனை விடுதலை செய்து—

அவரை தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட வாய்ப்பு அளிக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

திரு சந்திரசேகரன் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளராக — மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தெரிந்ததே. (ஒ 6)

## எழுச்சிமிகு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய பிரதான பேரணி யாழ் செயலகத்துக்குச் சமீபமாக, கண்டி வீதி — ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் மக்கள் பேரணிகள் மேற்குறிப்பிட்ட இடத்தை வந்தடையும். அங்கிருந்து பிரதான பேரணி, கூட்டம் நடைபெறும் யாழ் பல்கலைக்கழக மைதானத்தை நோக்கிச் செல்லும்.

ஆஸ்பத்திரி வீதி, கோவில் வீதி, நல்லூர் கோவில் பின் வீதி, பருத்தித்துறை வீதி, அரசடி வீதி, கந்தர்மடம் சந்தி குகன் வீதி, பிறவுண் வீதி, தொழில் நுட்பக் கல்லூரி முன் வீதி ஆகிய பாதைகளுடாகச் செல்லும் பிரதான பேரணி பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தைச் சென்றடையும்.

அங்கு நடைபெறும் மேதினக் கூட்டத்தில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளும் உரை நிகழ்த்துவார்கள்.

மே தினப் பேரணியில் சமகால நிகழ்வுகளையும் அரசின் இராணுவ அடக்குமுறைகளையும், பொருளாதார வளர்ச்சியின் அவசியத்தையும், போராட்ட எழுச்சிப் பரிமாணங்களையும் சித்திரிக்கும் ஊர்திகளின் பவனி சிறப்பு அம்சமாக அமையும்.

மே தினத்தை முன்னிட்டு பல வீதிகள், குறிப்பாக பேரணிகள் செல்லும் வீதிகள் சிவப்பு மஞ்சல் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன பிரதான வீதிகளில் தொழிலாளர் உரிமைகள் தொடர்பான கருத்துப் படங்கள், பதாதைகள், சுவரொட்டிகள் காணப்படுகின்றன. முக்கிய சந்திகளில் மேதின எழுச்சியையும், போராட்ட வளர்ச்சியையும் காட்டும் அலங்கார வளைவுகளும் கட்டப்பட்டுள்ளன.

இன்றைய மே தின விழாவை முன்னிட்டு இன்று சகல வர்த்தக நிலையங்களும் சந்தைகளும் மூடப்பட்டிருக்கும்.

தேனீர்க் கடைகள், வைத்தியசாலைகள், சைக்கிள் திருத்தும் கடைகள், டயர் ஒட்டும் கடைகள் ஆகியன மட்டுமே திறந்திருக்கும்

மேதினப் பேரணியில் கலந்துகொள்ளும் மக்களுக்கான, பிரதான இடங்களில் தாக சாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(மே தின பேரணி, கூட்டம் சம்பந்தமான ஒழுங்குகள் பற்றிய விவரங்கள் 5ஆம் பக்கத்தில்)

(அ-3-15-30)

## சடலத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும் ஓர் இளைஞரின் சடலம் கிருலப்பனையில் கண்டுபிடிக்கப்பட்டது தெரிந்ததே.

அந்த இளைஞர் யார் என்பதை அடையாளங்காண உதவுபவருக்கே 8 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படவுள்ளது.

அந்த இளைஞரின் புகைப்படம் மற்றும் விவரங்களை குற்றவியல் புலனாய்வுப் பணியகம் வெளியிட்டுள்ளது.

அத்துலத் முதலியை கொலை செய்வதற்கு பொறுப்பானவர் அல்லது பொறுப்பானவர்கள் பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு 50லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் முன்னர் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது: (ஒ-எ)

## பிரதிப்..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதவி உயர்த்தப்பட்டு — 21-4-92 இலிருந்து கல்வி நிர்வாக சேவை வகுப்பு 2 க்கு பதவி உயர்வு பெறுவதன் மூலம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பதவியைப் பெற்றுக் கொள்வார்கள்.

பிரதிக் கல்விப்பணிப்பாளர்களாக பதவி உயர்வு பெற்றாலும் அவர்களுக்கான சம்பள நிலுவைகள் வழங்கப்படுமா என்பது குறித்து அரசு முடிவெடுக்கவில்லை என்றும் அவர் சொன்னார். (த)

## கொழும்பில் மே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தவுள்ளன.

எதிர்க்கட்சிகள் இன்றைய மேதின நிகழ்வை, லலித் அத்துலத் முதலியின் படுகொலைக்கு ஆட்சேபம் தெரிவிக்க வாய்ப்பாகப் பயன்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-எ-6)


# திருமண வாழ்த்து

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நிகழும் ஆங்கீரச வருஷம் வைகாசி மாதம் (01—05—93) சனிக்கிழமை சுபமுகூர்த்த வேளையில் —

சுழிபுரத்தைச் சேர்ந்த சுவிஸில் வசிக்கும்
திருவளர் செல்வன்

★ சிவபாலன் அவர்களுக்கும் ★

ஆனைப்பந்தியைச் சேர்ந்த சுவிஸில் வாழும்
திருவளர் செல்வி

★ புஸ்பராணி அவர்களுக்கும் ★

சுவிஸில் திருமணம் இனிது நடைபெறுகின்றது. மணமக்களை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அம்மா, உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வாழ்த்துகிறோம்.

தகவல்:
சண்முகம் பரமேஸ்வரி
(அம்மா)
P. கண்ணன் (நண்பன்)

(25476)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org